දුරකථන / தொலைபேசி / Telephone ) 0112669192 , 0112675011 ) 0112698507 , 0112694033 ) 0112675449 , 0112675280

ෆැක්ස් / பெக்ஸ் / Fax ) 0112693866 ) 0112693869 )0112692913

විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் முகவரி / e-mail )postmaster@health.gov.lk

වෙබ් අඩවිය / இணையத்தளம் / website ) www.health.gov.lk

මගේ අංකය / எனது இல / My No. ) CF/EXO/10/2020

ඔබේ අංකය / உமது இல / Your No. : )

දිනය / திகதி / Date ) 2020.10.06

සුවසිරිපාය
சுவசிரிபாய
**SUWASIRIPAYA**

**සෞඛ්‍ය අමාත්‍යාංශය**
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

பொது சுற்று நிருப இலக்கம் : 02 - 85 /2020

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
மத்திய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
உரிய திணைக்களத் தலைவர்களும்.

**சுகாதார அமைச்சுடன் தொடர்புடைய (MN-4-2006 (A)) சேவைப்பிரிவு உத்தியோகத்தர் வகையினருக்கான இரண்டாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சை - 2020 (இரண்டாவது தடவை)**

சுகாதார அமைச்சுடன் தொடர்புடைய சேவைக்குழு MN - 4- 2006(A) சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளின் பொருட்டு தரம் II ற்கு பதவி உயர்த்தப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சை **2020.11.15ம்** திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் இடம், நேர அட்டவணை என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

**02 தகைமைகள்**

சுகாதார அமைச்சில் தொடர்புடைய சேவைக்குழு MN-4-2006(A) சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் (**நலன்புரி உத்தியோகத்தர், பிரச்சார உத்தியோகத்தர், நுண் புகைப்படவியலாளர், ஒலி மற்றும் ஒளி உத்தியோகத்தர், சமூக சுகாதார பொது வேலை உத்தியோகத்தர்**) தரம் II ற்கு பதவி உயர்வு கிடைக்கப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களும இதுவரை இப்பரீட்சையினை பூரணப்படுத்தியிராத உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும்: விண்ணப்ப படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதியான 2020.10.27ம் திகதியன்று IIம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்டு உரிய நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும்.**

**03 விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு, “சுவசிரிபாய”, இலக்கம் - 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு **2020.10.27ம்** திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என திணைக்கள தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 9 x 4 அங்குல அளவுடைய கடிதஉறைகள் 02 இனையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக

முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

**விண்ணப்பமானது A4 தாளின் இரு பக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 – 09 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.**

## 04 பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது.

## 05 பரீட்சையின் பொருட்டு உட்பத்திக் கொள்ளுதல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப்பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை
(இ) வலுவுள்ளசாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவுள்ளகடவுச் சீட்டு

## 06 பரீட்சை திட்டம்

இப் பரீட்சையானது விடயம் தொடர்பானதும் மற்றும் கணனி தொடர்பானமான கட்டுரை வினாக்களைக் கொண்டமைந்த இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது. விடயம் தொடர்பான வினாத்தாள் 07 வினாக்களைக் கொண்டுள்ளதுடன் அதில் 04 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். கணனி தொடர்பானது 08 வினாக்களைக் கொண்டுள்ளதுடன் அதில் 05க்கு மட்டும் வடையளிக்க வேண்டும். ஒரு வினாத்தாளிற்கான நேரம் 02 மணித்தியாலங்கள். மொத்தப் புள்ளிகள் 100. சித்தியடைவதன் பொருட்டு குறைந்த பட்சம் 40 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## 07 விடயப்பரப்பு

### 7.1 எழுத்துப் பரீட்சை (விடயம் தொடர்பானது)

01. **நலன்புரி உத்தியோகத்தர்**

**விடயப்பரப்பு**

வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் சேவையாளர்களின் நலன்புரி.
(மேற்படி விடயப்படரப்பிற்கு உரியதான வினாத்தாள்.)

02. பிரச்சார உத்தியோகத்தர்

**விடயப்பரப்பு**

01. தொடர்பாடல் என்றால் என்ன? அறிமுகம் செய்தல்.

02. தொடர்பாடல் வகைகள் தொடர்பான அறிவு

- நபர்களுக்கிடையேயான தொடர்பாடல்
- சமூக தொடர்பாடல்
- மக்கள் தொடர்பாடல்

03. தொடர்பாடல் சக்கரம் தொடர்பான அறிமுகம்
தொடர்பாடல் சக்கரம்

- செய்தியை வழங்குபவர்
- செய்தி
- மொழி
- பாவனையாளர்/செய்தியை பெறுபவர்
- பதில்

04. இலத்திரணியல் ஊடகம் என்றால் என்ன? அச்சிடப்பட்ட ஊடகம் என்றால் என்ன? இலத்திரணியல் ஊடக தொடர்பாடல் மற்றும் அச்சிடப்பட்ட ஊடகத் தொடர்பாடல் ஆகியவற்றின் நன்மை, தீமைகளை ஆராய்தல்.

05. களச்சுகாதாரத் தொடர்பாடல் செயற் திட்டத்தினை திட்டமிடும்போது அவதானிக்கப்பட வேண்டிய காரணிகள்.

- தொடர்பாடல் செயற்திட்டத்தை இனம்காணும் பெயர்.
- தொடர்பாடலின் நோக்கத்தை விளக்குதல்.
- இலக்கிடப்பட்டுள்ள பாவனையாளர் குழு.
- செயற்பாட்டு வலயம்
- பொருத்தமான தொடர்பாடல் முறையை தெரிவு செய்தல்.
- செய்தி தயாரித்தல்
- பின்புலம்
- செலவு செய்தல்

06. களச்சுகாதாரத் தொடர்பாளர்கள் கவனிக்க வேண்டிய காரணிகள்.

- இலக்கிடப்பட்டுள்ள சமூகத்தை புரிதல்
- அவர்களுக்கு புரியும் விதத்திலான தொடர்பாடல்
- பொதுமக்கள் தொடர்பு
- எதிர்பார்க்கப்பட்ட இலக்கை நோக்கி பயணித்தல்

07. சுகாதார பணியாளர் குழுக்கள் மற்றும் சமூகத்தை அறிவூட்டும் பொருட்டு சுகாதார தொடர்பாடலின் நோக்கத்தை அடைவதற்காக பிரச்சாரம் மேற்கொள்ளும் போது வெவ்வேறாக கவனிக்கப்பட வேண்டிய காரணிகள் மற்றும் அவற்றை அச்சிட்டு பிரசுரிப்பதற்கு கடைப்பிடிக்கப்பட வேண்டிய படிமுறைகள் தொடர்பான விபரம்.

08 (i) நோய் தடுப்பு தொடர்பில் பொதுமக்களை அறிவூட்டும் பொருட்டு காலத்திற்கேற்றவாறு சமூகம் அறிந்திருக்க வேண்டிய நோய் நிலை தொடர்பான பத்திரிகை ஊடகத்திற்கு, வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களுக்கு அறிவித்தல் தயாரித்தல்.

(ii) அதன் படிமுறைகளை ஒவ்வொன்றாக விபரித்தல்.

09. நோய் தடுப்பிற்காக வெளிக்கள தெரிவிப்பிற்காக பயன்படுத்துவதற்கான தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய காரணிகள் மற்றும் அவ்வாறான தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய காரணிகள்.

10. பொதுமக்களை அறிவூட்டும் கருத்தரங்கில் சுகாதார தொடர்பாடலாளரினால் கவனிக்கப்பட வேண்டிய காரணிகள்.

(i) உரிய விடயம் தொடர்பான புதிய விடயங்களை அவதானித்தல்.
(ii) முன் ஆயத்தம்.
(iii) கருத்தரங்கின் பொருட்டு இலக்கு வைக்கப்பட்டுள்ள குழு தொடர்பான அறிவும் புரிதலும்.
(iv) சந்தர்ப்பம் மற்றும் காலத்திற்கு அமைய வடிவமைத்தல்.
(v) அனைத்து பங்காளர்களினதும் அவதானம்.
(vi) பொருத்தமான உதாரணங்களை இணைத்துக்கொள்ளல்.
(vii) தராதரம்
(viii) விரிவுரையாளரின் ஆடை ஒழுங்கு

மேற்படி விடயங்களை உள்ளடக்கிய எழுத்து மூலமான வினாத்தாள்.

03. **நுண் புகைப்படவியலாளர்**

விடயப்பரப்பு

நிழற்படமெடுத்தல் தொடர்பாக (வில்லையினூடு வரும் பிரதிபலிப்பை சேமித்தல், டிஜிட்டல் கமரா தொழிற்படும் விதம், ஒளிக்கட்டப்பாடு போன்ற) தயாரிக்கப்பட்ட எழுத்துமூல வினாப்பத்திரமாகும்.

04. **ஒலி ஒளி உத்தியோகத்தர்.**

விடயப்பரப்பு

- ஒலிஒளி உபகரணங்களை (அச்சிடப்பட்டதும், இலத்திரணியல்) உருவாக்குதல்.
- ஒலிஒளி உபகரணங்களுக்கு பொறுப்பாயிருத்தல், அவற்றின் பராமரித்தல் மற்றும் சேவிஸ்.
- சுகாதார கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அவசியமான ஒலிஒளி உபகரணங்களை உருவாக்குதல்.

மேற்படி விடங்களை உள்ளடக்கிய எழுத்து மூலமான வினாத்தாள்.

05. **சமூக சுகாதார சமூக செயற்பாட்டு உத்தியோகத்தர்**

விடயப்பரப்பு

சமூகவியல், சமூக ஒருங்கிணைப்பு,மனிதப் பழக்கங்கள், சமூக செயற்பாடுகள், சுகாதார சேவையினை பெற்றுக் கொடுத்தல் போன்ற பிரிவுகளை உள்ளடக்கிய எழுத்து மூலமான வினாத்தாள்.

7.2 **கணணிப் பரீட்சை**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இயலுமைகள் விண்ணப்பதாரிகளிடம் உள்ளதா என்பதை பரீட்சிப்பது இந்த பரீட்சையின் நோக்கமாகும்.

தகவல் தொழிநுட்பம் → தொகுதி மென்பொருள் உதா. செயற்பாட்டு தொகுதி (Operating system)

தகவல் தொழிநுட்பம் → பயன்படுத்தப்படும் மென் பொருள்.

இதன் கீழ் எதிர்பார்க்கப்படும் அறிவு மற்றும் திறமை

(அ) கணனியினை உரியமுறையில் உயிர்ப்பித்தல் மற்றும் செயலிழக்கச் செய்தல்.

(ஆ) கணனி இறுவட்டில் கணனிக் கொத்து (Directory) மற்றும் கணனிக் கோவைகளை (files) உருவாக்கப்பட்டுள்ள முறை.

(இ) கணனி கோவைகளை புதிதாக உருவாக்குதல். : அந்த கொத்திலிருந்து கோவையொன்றினை புதிதாக உருவாக்குதல் : கோவைகளை அழித்தல் (Delete) : பிரதியெடுத்தல் (Copy) : பிரதியெடுக்கப்பட்ட கோவையை வேறு கொத்திற்கு மாற்றுதல்: கோவை, ஒரு கொத்திலிருந்து வேறு ஒரு கொத்திற்குக் கொண்டு செல்லல் (Move), பெயர் மாற்றம் (Rename)

(ஈ) கொத்தில் அடங்கியுள்ள கோவைகளின் எண்ணிக்கை, கோவையின் தன்மை, கோவை உருவாக்குவதற்கு தேவையான மென்பொருள், ஆரம்பிக்கப்பட்ட அல்லது மேம்படுத்தப்பட்டுள்ளது தொடர்பான தகவல்களை தேடுதல்.

(ஊ) மென் பொருளை மீள அமைத்தல் (Format)

**08 பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரனியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**09** தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினை தங்களின் திணைக்களத்தில்/ நிறுவனத்தில்/ பரிவில் / விசேட இயக்கத்தில் கடமையாற்றும் சகலசுகாதார சாரதிச் சேவை உத்தியோகத்தர்களிற்கும் தெரியப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இந்த தகவல்களை www.health.gov.lk எனும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**கவனிக்கவும் :- சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்று நிருபங்களுக்கிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழி மூல சுற்று நிருபமே வலுவுடையதாகும்.**

H. A. Kamal Pushpakumara
Deputy Director General (Administration) 02
Ministry of Health and Indigenous Medical Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha
Colombo 10.

எச் ஏ கமல் புஸ்பகுமார
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளரின் பொருட்டு
சுகாதார அமைச்சு

**EXO**

அலுவலக உபயோகத்தின் பொருட்டு

மாதிரி விண்ணப்பப் படிவம்

## சுகாதார அமைச்சில் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் சேவைப்பிரிவு (MN - 4- 2006(A) பதவிகளுக்கான இரண்டாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சை - 2020 (இரண்டாவது தடவை)

**01.** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்): ..........................................................................

..........................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( ஆங்கில கப்பிற்றல் எழுத்தில்):

(iii) முதல் எழுத்துடன் பெயர் : (தமிழில்): ..........................................................................

..........................................................................

(iv) முதல் எழுத்துடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

(ஆ) (i) பதவி : ..........................................................................

(ii) தரம் II ற்கு நியமிக்கப்பட்ட / உயர்வு பெற்ற கடித இல மற்றும் திகதி: ..........................................

..........................................................................

(iii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம்: ..........................................................................

(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம்

(v) தேசிய அடையாள அட்டை இலக்கம்

**02.** தாங்கள் தோற்றுவதற்கு எண்ணியுள்ள விடயத்திற்கு எதிரேயுள்ள கூண்டினுள் ( √ ) அடையாளத்தினை இடுக.

விடயம் தொடர்பான வினாத்தாள் கணணிப் பரீட்சை வினாத்தாள்

**03** (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம்: (ஆங்கிலத்தில்)..........................................................................

(தமிழில்) ..........................................................................

(ஆ) இந்தநிறுவனம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசினால்

- மாகாணசபையினால்

(இ) அதற்குரிய மாவட்டம் : ..........................................................................

(ஈ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9''x4'' அளவு ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை இரண்டு இணைக்கப்பட்டு உள்ளதா?..........................................................................

(உ) (i) தபால் முகவரி (தமிழில்): ..........................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்): ..........................................................................

**04** பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ..........................................................................

**05.** (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? .......................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?

| முத்திரைக் கூண்டு |
|---|

**06. விண்ணப்பதாரியின் உறுதியுரை:**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா.................. பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும்* இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள அமைச்சு பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி :..............................

...........................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

**07. தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் உறுதியுரை**

இந்த விணணப்பம் விண்ணப்பம் பாரமேற்கப்படும் தினத்திற்கு முன்னர் என்னிடம் கிடைக்கப்பெற்தென்றும், தனிநபர் கோவையில் உள்ள தகவல்களுக்கு அமைய விண்ணப்பதாரி இந்த விண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தியுள்ளதாகவும், இந்த விண்ணப்பத்தில் பிரதி தனிநபர் கோவையில் கோவையிடப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :

.......................................................

பெயர், கையொப்பம்

**08. நிறுவனத் தலைவரின் கையொப்பம்**

திரு/திருமதி/செல்வி/செல்வன்* ............................................. என்பவர்.................................. உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகின்றார். ஏன்றும் அவ் உத்தியோகத்தர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக இல்லாத* படியால் ரூபா ........... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் /முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:..............................

...................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

**09. பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட இயக்கத்தலைவரின் உறுதிப்படுத்தல்.**

திரு/திருமதி/செல்வி/செல்வன்* ............................................ என்பவர் எனது நிறுவனத்தில் ...................................... உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்றும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரியதகைமைகளினை இவர் பூத்திசெய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:..............................

.............................................................

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/விசேட இயக்கத்
தலைவரின் கையொப்பம்(இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்

* - பொருத்தமற்றதை வெட்டிவிடவும்